
# தடம் மாறா நினைவின் பதிவு



## தமிழ்த்தேசிய பற்றாளன்
## அமரர்
## வேலுப்பிள்ளை செல்லத்துரை

(மேனாள் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு**
**இலங்கை தமிழ் அரசு கட்சி**
**கிளிநொச்சி மாவட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறா நினைவின் பதிவு



**தமிழ்த்தேசிய பற்றாளன்**

**அமரர்**

**வேலுப்பிள்ளை செல்லத்துரை**

**(மேனாள் கரைச்சிப்பிரதேச சபை உறுப்பினர்)**

**இலங்கை தமிழரசுக் கட்சி**

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு**

**கிளிநொச்சி மாவட்டம்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
℻ : 021 2221595, 021 2280024
📱 : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
℻ : 021 2221595, 021 2280024
📱 : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

**2016.07.26.**

அரசியல் போராளியாய் பரிணமித்தவர் ...

அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை ஐயா அவர்களை நான் அறிந்து பழகிய காலங்கள் இனிமையானவை. அவருடைய சிந்தனையும் செயல்களும் என்னை ஊக்குவித்த, வழிப்படுத்திய விடயங்களாகவே பார்க்கிறேன். அன்னாருடைய அபாரமான ஆளுமைக்கு நாங்கள் எப்போதும் தலைசாய்த்துக் கொள்கிறோம். 2009ம் ஆண்டு எமது ஆயுத ரீதியிலான விடுதலைப்போராட்டம் மௌனித்தபிற்பாடு ஜனநாயக வழியில் விடுதலைப் போராட்டத்தை தொடர வேண்டிய வரலாற்றுக் கடமையைநாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டோம். அந்தவேளையில் அரசியல் பயணம் இலகுவானதாக இருந்துவிடவில்லை.

உயிர் அச்சம் மிகுந்த ஜனநாயக வெளியே எம்மைச் சூழ்ந்திருந்தது. இராணுவ நெருக்குவாரங்கள், படைத்துறை ஆக்கிரமிப்புக்கள், புலனாய்வு எச்சரிக்கைகள், காட்டாட்சி அரசும், அதன் கையாட்களின் அடாவடிகளும் எனவிரிந்த சூழலில் எம்மோடு மக்கள் அரசியல் பணியில் இணைந்து கொண்டவர் செல்லத்துரை ஐயா அவர்கள்.

இச்சந்தர்ப்பத்தில்தான் ஐயாவினுடையவிடுதலை பற்றியதாகம், அதற்காக அவர் கொண்டிருந்த ஆன்ம பலத்தினை நாங்கள் அறிந்தோம். ஆயுத அழிவுகளால் அடக்கப்பட்டாலும் தமிழர்களின் இலட்சியத்தாகம் அணையாது என சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைத்த 2011ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையை பெற்றுத்தருவதில் அவர் வெளிப்படுத்திய ஆர்வம் சிறப்பானது.

அதன் பின்னரான காலத்தில் அவரிடம் காணப்பட்ட இலட்சியப் பிடிப்பு, நேர்மைமிகு செயல்கள், ஒடுக்கு முறையாளர்கள் மீதான கோபம், நேர்மையீனமானவற்றை உரத்து மறுத்துப் பேசுகின்ற நெஞ்சுரம், தனது கிராமம் மீதும்,பிரதேசம் மீதும் கொண்டிருந்த கரிசனை, நேரம் தவறாமை என்பனவற்றால் அவரை நாங்கள் அரசியல் போராளியாகவே மதிப்பளித்து வந்தோம்.

விசேடமாக மக்களுடைய விமர்சனங்களை கட்சியினது கவனத்திற்கு நயமான முறையில் கொண்டு வருவதும், தனது பிரதேசத்தினுடைய தேவைகள் குறித்து பக்குவமாக எடுத்துரைப்பதும், கட்சியின் கௌரவத்தைப் பாதுகாப்பதில் அவர் கொண்டிருந்த நிலைப்பாடு எங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் திகழ்ந்தது. மக்கள் தரிசிப்புப் பணிகளுக்காக அவருடைய பிரதேசத்துக்குச் செல்கின்றபோது எம்மை அழைத்து தனது வீட்டில் உபசரித்து மகிழும் பாங்கு மனதை விட்டு அகலாதவை. சமூகத்துக்கும் தேசத்துக்கும் அவர் ஆற்றியபணிகள் போலவே சிறந்த இல்லறத்தையும், நன் மக்களையும், தனதாக்கி சமூகமதிப்பு பெற்ற மனிதனாக வாழ்ந்துபோனார் எங்கள் செல்லத்துரை ஐயா.

இத்தகைய ஒருபெருமகனுக்கு"தமிழ்த் தேசியப்பற்றாளன்" எனும் உயர்ந்த கௌரவத்தை அவருக்கு அளித்து அவரது ஆத்மா அமைதி அடைய பிரார்த்திக்கின்றோம்.

நன்றி,

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்றஉறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம், 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

My No. | Your No | Date 2016.07.25

**2016.07.26.**

## தொண்டர்களாய் பணிதொடர்வோம்......

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய செல்லத்துரை அண்ணன் அவர்களின் பிரிவு எமது கட்சிக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்துகின்றது. இவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த தலைவராகத் திகழ்ந்தவர். இவரின் செயற்பாடு எமது கட்சிசார்ந்த அபிவிருத்திச் செயற்பாடு களுக்கு அப்பால் எமது இனத்தின் அரசியல் சார்நிலையை மேன்மைப்படுத்தவும் உதவியது.

சாதாரணமாக இலங்கைப் போக்குவரத்துசபையில் சாரதியாக செயலாற்றிய ஒருவர். கிளிநொச்சி பிரதேசமக்கள் மத்தியில் கவனிப்புப் பெற்ற,கருத்தூன்றிய அரசியல் செயற்பாட்டாளராக வலம் வந்தார். இதனால் மக்களின் விடிவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஒருவராகத் திகழ்ந்தார்.

எனதுஅரசியல் பிரவேசம் **2013** ஆம் ஆண்டுஆரம்பித்தது. மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியநேரம் அது. எம் இனம் இந்தத் தேர்தலில் மிகப்பெரும் வெற்றி பெற்று மாகாண அரசைக் கோலோச்சுவதற்கு எதிர்பார்த்துக் காத்திருந்த தருணம். எமதுதேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளோடுதோள் நின்று வீதி வீதியாக ஊர் முழுவதும் தேர்தல் பிரசாரத்துக்காக கடுமையாக உழைத்தவர். எம்முடைய தேர்தல் வெற்றிக்கு இவரும் ஒரு முக்கிய தூணாக விளங்கினார் என்பதை இங்கே அழுத்தமாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவர் கரைச்சிப்பிரதேசசபையின் ஒரு உறுப்பினராகதனது இறுதிக்காலத்தில் செயற்பட்டிருந்தார். அத்தோடுஅவரது அரசியல் வாழ்வும் பொதுவாழ்வும் இவ்வுலகைவிட்டுமறைந்துபோய்விட்டது. இருப்பினும் அவர் விட்டபணிதொடர்வதற்குதொண்டர்களாய் நாம் எம்மைஅர்ப்பணித்திருப்போம்.

தம்பிராசா குருகுலராசா.
கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்குமாகாணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவையில் முன்னின்றுழைத்த அமரர். செல்லத்துரை ஐயா.

இராமநாதபுரம் கிராமத்தின் ஒளிவிளக்காய் மிளிர்ந்து அமரத்துவம் எய்திய அமரர். செல்லத்துரை ஐயா பற்றி ஒரு சிறுகுறிப்பை தெரிவிக்க கிடைத்த சந்தர்ப்பத்தை எனது பாக்கியம் என உணர்கிறேன். நான் வட்டக்கச்சி கொத்தனார் அதிபராக கடமைபுரிந்த 1988-1992 காலப்பகுதியில் C.T.B செல்லத்துரை என பலரும் அழைத்த காலம் இன்னும் என் நினைவில் உள்ளது. வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்களில் ஐயாவைப் பற்றி தெரியாதவர்கள் எவரும் இல்லை எனக் கூறலாம். போக்குவரத்துச் சேவையின் மூலம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னரே சேவைக்கு இலக்கணம் வகுத்தவர்களில் அமரர் தனித்துவமானவர்.

பிற்காலத்தில் அரசியல்துறைப்பிரவேசத்தினூடாக கரைச்சிப்பிரதேச சபையின் உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். கிடைத்த சந்தர்ப்பத்தை அபிவிருத்திக்காக பயன்படுத்திய உன்னத சேவையாளர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களில் ஒருவர். இராமநாதபுரத்தில் பல வருடகாலம் கவனிப்பாரற்று செப்பனிடப்படாத வீதிகள் இவரால் அபிவிருத்தி செய்யப்பட்டதை யாவரும் அறிவர். நேர்மை, கடின உழைப்பு, யாருக்கும் அஞ்சாது தனக்கு சரி எனப்பட்டதை கூறும் துணிச்சல் என்பன அமரரின் ஞாபகச்சின்னங்களாகும். யாருக்கும் அஞ்சாமை, எந்த இடத்திலும், யார் முன்னிலையிலும் எதையும் எடுத்துரைக்கும் ஆற்றல் அமரரின் தனித்துவங்களாகும்.

அமரரின் புத்திரர்களிலும் இத்தகைய பண்புகளை நான் அவதானித்தேன். இவ்வாறாக சமூகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டான பெரியவர்கள் மறைந்து செல்லும் இக்காலத்தில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அமரரின் மறைவு எமக்கெல்லாம் பெரும் துன்பமாகவும் இழப்பாகவும் ஏற்பட்டுள்ளது. எனினும் புகழோடு தோன்றி நல்சேவையாளனாய் வாழ்ந்து காட்டி ஊர்மக்களது அபிமானத்தின் ஒரு விளக்கு மறைந்துவிட்டது என்பதுதான் பேரிழப்பாகும். எப்படி எது நடந்தாலும்,'பிறப்புண்டேல் இறப்புண்டு" எனும் வாழ்வின் தத்துவத்திற்கு மதிப்பளித்து அமைதி பெறுகின்றோம்.

நன்றி,
**பசுபதி அரியரத்தினம்,**
மாகாணசபை உறுப்பினர்,
வடக்கு மாகாண சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக் கடமையை நிறைவு செய்த தலைவன்.

1 பலர் ஒதுங்கினர்.... பயந்து சமரசப்பட்டும் ஒழித்தும் பதுங்கியும் இருந்த சூழலும் நினைவுக்குரியது.
தேர்தலுக்கு முகம் கொடுத்த போது நேரடி மறைமுகமிரட்டல்கள், தடுத்தல்கள், இராணுவ புலனாய்வுகள், சொத்தழிப்புக்கள், பிரச்சாரத்தடைகள், அழிப்புக்கள், தாக்குதல்கள், இருட்டடிகள் இவற்றை ஓர் இலட்சியத்தோடு ஏற்றோம்.

2011. 07.23ம் நாள் மக்களின் விருப்பார்ந்த ஆணையைப்பெற்று உள்ளூர் ஆட்சி அதிபாரத்தை நான்கு தசாப்தத்தின் பின் முதல் வெற்றி கொண்டு ஜனநாயக மீட்பின் உறவுகளானோம்.

கரைச்சி பிரதேசசபையைப் பொறுப்பேற்றபோது தொடர்ந்தும் அரசும், அரசியல்வாதிகளும், அரச நிர்வாகமும் உள்ளும், வெளியும் ஏற்படுத்திய தடைகள், எதிர் நிலைகள் மிக மோசமானது. எனினும் இவற்றுக்கு முகம் கொடுத்து அழிந்து போன எமது பிரதேசத்தை மீள புதிய சிந்தனை, புதிய யுக்திகள், உறுதிகளோடு பல மக்கள், நலம்சார் திட்டங்களை நிறைவாக்கியுள்ளோம். இன்னும் செய்ய வேண்டிய ஏக்கங்கள் உண்டு. இச்செயற்பாடுகளில் எல்லாம் உங்களின் பங்கும் பணியும் அளப்பெரியது.

உங்கள் உறவு தந்த நினைவு அதிர்வுகளை மீளப்புடம் போடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ சபையில் கோபமின்றி பேசும் பேச்சும் கூட்டங்களில் தவறாது உரிய காலத்தில் கலந்து கொள்ளும் முறைமையும், பொறுப்பேற்கும் ஆற்றலும் உங்களுடையது.

➢ சபையின் தீர்மானங்கள் பல ஆய்வுகளின் பின் தான் ஏற்றுக்கொள்ளப்படும். அவற்றைத்தாங்கள்தான் முன் மொழிவீர்கள், அதிகமான முன்மொழிவுகள் வழி மொழிவுகள் உங்களுடையது.

➢ வட்டக்கச்சி நூலகத்தை, கௌரவ உறுப்பினர்களான சுவிஷ்கரன், சிவச்செல்வனுடன் இணைந்து மீள நிர்மாணித்தமை அறிவுசார் சமூகம் மீது நீங்கள் கொண்டிருந்த பற்றுறுதியை வெளிக்காட்டியது.

➢ அமரர்கள் ஆலயத்தை வசதிகளோடும் வளங்களோடும் திருத்தங்களை மேற்கொள்ளவும், அதில் கிறிஸ்தவ இஸ்லாமிய உறவுகளுக்கான இடங்கள் சரியான முறையில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்ற தங்களின் சமூகப்பார்வை பாராட்டத்தக்கது.

➢ கலைக்சுடர் சனசமூகநிலையத்தை அமைத்து அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதற்காக வழிகாட்டியதுடன் அதற்காக செயற்பட்ட சிறப்பும் உங்களையே சாரும்.

➢ கரைச்சி பிரதேச சபையின் செயற்பாடுகளில் அதிகமான நாட்கள் அலுவலகம் வந்து ஆலோசனை வழங்கிய கௌரவ உறுப்பினர்களுள் நீங்கள் என் நினைவுக்குரியவர்.

➢ கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நீங்கள் இணைந்திருந்த காலமும் பணிகளும் நினைவுக்குரியது. தேர்தலின்போது இடஒதுக்கீட்டு தேசியத்தில் இணைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலும் தேர்தலின் போதான இட ஒதுக்கீட்டுத் தேசியத்தால் இணைந்த நிலையிலும் தேர்தலின் பின் ஓர் நேர் ஒழுங்கில் உறுதியாகச் செயற்பட்டமை உங்களின் வழுவாத இன்னுமோர் சாணக்கிய முன்னுதாரணம் என்பேன்.

முடிவாக...... அன்னாரது அனுபவமும் ஆற்றலும் காலக்கடமையின் பங்காக நீட்சி பெற்றிருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் ஆனால் இலவு காக்கும் கிளித்தன நிறைவேற்று அதிகாரத்தால் நல்லாட்சி அரசு உள்ளூராட்சித் தேர்தலைக் காலம் கடத்தி விட்டது. அதனால் அன்பான, சிறந்த முன்னுதாரணங்களின் பெரியவரை இழந்த துயரம் கொடியது.

அவரது அன்பான துணைவி, பிள்ளைகள், மருமக்கள், உறவுகள்,சபை நண்பர்கள் எல்லோருடனும் எமது துயர் நிறைந்த நிமிர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறோம்.

நன்றி,

**நா.வை. குகராசா**
மேனாள் தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியாக வாழ்ந்தவர் செல்லத்துரை ஐயா!!

கிளிநொச்சி மாவட்டத்தின் பழம் பெரும் கிராமமான இராமநாதபுரத்தில் பண்புடன் வாழ்ந்தவர் அமரர். வே.செல்லத்துரை ஐயா.அன்பான மனைவி ஆளுமை மிகுந்த பிள்ளைகள். அமைதியான குடும்பம். ஆலமரம் போல் விழுதெறிந்து உறுதி மிக்க அவரது சிந்தனைகள். அறப்பணியிலும் அருட்பணியிலும் அவர் வைத்திருந்த பற்று. அசையாத அவரது நம்பிக்கை. பட்டறிவு அவருக்குக் கொடுத்திருந்த பலம், இவை அனைத்தும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர் செல்லத்துரை ஐயா.

சிறுவயதிலிருந்து அறிமுகமாயிருந்தாலும் அவருடன் நெருங்கிப் பழகுவதற்கான வாய்ப்பு பிரதேச சபை உறுப்பினராக இருவரும் ஒன்றாக வேலை செய்கின்ற போது கிடைத்தது. உடலளவில் தளர்ந்திருந்தாலும் மனதளவில் அவரிடமிருந்த பலம் எனக்கும் புது உத்வேகத்தைத்தந்தது. குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் வாருங்கள் ஐயா என்று சொன்னால் சரியாக அந்த இடத்தில் அவர் நிற்பார். இன்று வட்டக்கச்சி, இராமநாதபுரத்துக்கான பொதுநூலகம் சிறப்பாக சேவை புரிவதற்கு அவர் எண்ணங்களும், உழைப்புமே காரணமாகும்.

இறுதிக்காலங்களில் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எம் இனத்தின் இருப்புக்காகத் தன்னையும் அர்ப்பணித்து இறுதிவரை உறுதியுடன் பயணித்தவர் ஐயா. இன்று எம்மை விட்டு பிரிந்து சென்றாலும் அவர் செய்த சேவை எம் இனத்தை தலை நிமிரச் செய்யும்.

**"நாம் வீழ்ந்தாலும் எம் இனம் வாழும்"**
**என்றும் உங்கள் நினைவுகளுடன் !.**

**விஷ்ணுநாதன் சுவிஷ்கரன்.**
மேனாள் கரைச்சி.
பிரதேச சபை உறுப்பினர்,
**வங்கி முகாமையாளர்** - கிராமிய வங்கி,
கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்.
செயலாளர் - மாவட்ட உதை பந்தாட்டச்சங்கம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவின் அடையாளமாய்

## அமரர் செல்லத்துரை!

இந்த எங்கட......... இராமநாதபுரம் ........ மாவடி........அம்மன் வீதி...... என்ன மாதிரி.......

இந்த எங்கட......... இராமநாதபுரம் ........ மாவடி........அம்மன் வீதி...... என்ன மாதிரி.......

இந்த எங்கட......... இராமநாதபுரம் ........ மாவடி........அம்மன் வீதி...... என்ன மாதிரி.......

நான்கு ஆண்டுகள் எமது பிரதேச சபை வாழ்வில் 45 கூட்டங்களுக்கு மேல் ஒலித்த சத்தம்..... ஒலித்த குரல்...... இன்று இல்லை. வாழ்நிலக்கனவுடன் உயிர்நீத்த மனிதரில் இவரும் ஒருவர்.

செல்லத்துரை அண்ணர் என்று அழைக்கப்பட்டாலும் ஊருக்கு இவர் பெரியதுரை. சபையில் கொள்கை மாறாத கோசத்துரை. தனது கோரிக்கையை ஐமதர்மராஜனுக்குக் கூட, உரத்துக்கூறியே சென்றிருப்பார் என்பது எனது ஆன்மீக எண்ணம். நெஞ்சை நிமிர்த்தி இறுமாப்புடன் பிரதேச, மாவட்ட அபிவிருத்தி, தேசியம் பேசியவர். இவர் சாரதியாம் ........ சொன்னார்.......

சபையில் அருகிருக்கும் கதிரை ஆகையால் அதிகம் பேசுவதுண்டு.

தம்பி தயா இந்த .......என்று தொடங்கினால் நியாயம் கொண்ட விடயங்களையே பேசுவார். மறைச்சிந்தனை மிகக்குறைந்த மனிதர் இவர். செய் அல்லது செத்து மடி என்பது இவருக்கு அதிகம் பிடித்த கருத்து.

பார்த்தால் சண்டைக்காரன், பழகினால் பதுமை, இவர் பல ஊர் கண்ட சாரதி, பல நண்பர்களுடன் பழகிய பண்பாளன். ஒரு சந்தர்ப்பம் ..............

சபைக்கு வாகனக் கொள்வனவுக்குழுவில் இவர் மூப்பர். வாகனங்களை அக்குவேறு ஆணி வேறாக அறிந்தவர். ஆளுமை ஆசான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கேற்பவே தன்னை, தன் திறமையை, தன் கொள்கையை காட்டிக் கொள்பவர். அறிவுக்கு அடையாளத்தில் ஒன்று இதுவோ? ...... அனுபவங்களை அருகிருந்து கற்றுக்கொள்ள காலம் இடம் கொடுக்கவில்லை. நான் பெற்ற இவர் தம் அனுபவம் சொற்பம் என்று எண்ணுகிறேன். பல காலம் அருகிருந்தவர்கள் அறிவிக்க ஆவல்.

பல மேசைகளில் கூடி உணவு உண்ட அனுபவம் இவரின் நடத்தையில் அறிந்தேன். கற்றும் கொண்டேன். வீட்டில் உணவளிப்பதில் அதிக பிரியம். அவர் தம் மனைவிக்கு இது நலம். தோழனுக்குத் தோழனாய் தந்தைக்குத் தந்தையாய் வாழ்ந்தவர்.

இவருக்குத் தெரிந்தது ஒரு வழியல்ல. ஆனாலும் வாழ்வை ஒரு வழியில் இட்டுச்சென்றவர்.

கண்கள் தினமும் பயணித்துக் கொண்டே இருந்ததனால் புதிது புதிதாய் காணாத நாட்களே இல்லை. தூங்காத விழிகளால் உயிரைக்காத்தவர். ஊர் போகச் செல்வார், உலாக்காட்டி வந்தவர், இன்று கண்மூடி ஓய்வெடுத்ததை என் சொல்வேன்.!

நிஜ உலக வாழ்வில் உயிர் நீத்த இவர் கனவுலக வாழ்வில் எம்முள் கலப்பார் என்பதில் ஐயமில்லை.

செல்லத்துரை அண்ணரே! நீவிர் உலா வரும் வேளையில் என்னுடன் கூடிப்பேசும் நாளை ஒதுக்கும்

சில காலம் பழகினாலும் பலதும் பேசுவோம், மீண்டும் உம் குரல் கேட்டு ஆழ்மனம் மகிழவும், முகம் பார்த்து பேசவும், உமது எண்ணங்களைப்பதியவும், கனவுலகில் வருவீராக.
அன்னாரின் ஆத்மா வியாபித்துச் செல்ல அறியாச்சக்தியை வேண்டுகிறேன்.

நன்றி,

சுந்தரமூர்த்தி தயாபரன் - ஆசிரியர்.
மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,
கரைச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகசேவகனுக்கு எனது இரங்கல் !..

காலஞ்சென்ற 2016.06.30 அன்று காலமான எமது சக உறுப்பினர் அமரர் வே.செல்லத்துரைஅவர்களின் நினைவுகளைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ளஆவலாய் இருக்கின்றேன்.

ஒரு சமூகத் தொண்டனாக தமிழ்த்தேசியப் பற்றாளனாக அவர் எமது பிரதேசத்தை முன்னேற்று வதற்கு எடுத்தபிரயத்தனத்தை நினைத்துப் பார்க்கிறேன். அவரின் இழப்பு எம் எல்லோருக்கும் பேரிழப்பாகவே அமைகின்றது.

இந்நிலையில் அவரின் கடமைகளைத் தொடர்ந்து கொண்டு செல்வதுதான் நாம் அவருக்குசெய்யும் அஞ்சலியாக இருக்கும். இந்நேரத்தில் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தின ருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி,

**மா.சுகந்தன்,**
மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் ஓர் பதிவு !

அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் ஓர் சிறந்த சமூகசேவையாளன். இராமநாதபுரம் கிராமத்தில் வாழ்ந்த நீண்டகால வரலாற்றில் செல்லத்துரை அவர்களை நண்பனாக நமது வாழ்வின் பகுதியில் கிடைக்கப்பெற்றமை மிகவும் பெருமைக் குரியது. அக்காலப்பகுதியில் பல்வேறு சமூகப்பணியில் அவர் முன்னின்று உழைத்திருக்கின்றார். இவரின் காலத்தில் அக்கிராமம் செழிப்பு மிக்ககாலம் என்றேசொல்லலாம். இலங்கை போக்குவரத்துச் சபையின் பண்பான சாரதியாகவும் போராட்ட காலத்தில் கிளி/கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கொள்வனவிற்கு பாரவூர்திச்சாரதியாக பல தடவைகள் பல துன்பங்களை வென்று தியாக மனப்பாங்குடன் கடமையாற்றியவர்.

அண்ணன் செல்லத்துரை அவர்கள் 2011ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினராக நான்கு வருடங்கள் நமது பகுதிக்கு பல அபிவிருத்தி வேலைகளைச் செய்து மக்கள் மனங்களைக் கவர்ந்தவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்தின் தலைமைக் காரியாலயமான "அறிவகத்துக்கு" தவறாது வருகை தந்து நம் கட்சிசார்ந்த செயற்பாட்டிற்கு முன்னின்று உழைத்தவர் என்று சொல்வதில் உயர்ந்தவர் இவர். இராமநாதபுரம் மண்ணின் வசந்தத்தின் மனிதனாக அண்ணன் செல்லத்துரை அவர்கள் வாழ்ந்து போயுள்ளார். இவரின் ஆத்மா அக்கிராமத்தின் வாழ்வியலில் கலந்திருக்கும் என்பது என் நம்பிக்கை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி,

இ. பொன்னம்பலநாதன்,<br>
மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,<br>
கரைச்சிப் பிரதேச சபை,<br>
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதையாகி மரமாகும் நினைவின் நிழல்கள் !.

வயதுகள் கடந்தும்,
முதுமையைப் பாராது
இளமையாக நடக்கும்
எனது நண்பன் செல்லத்துரை
எம்மோடு இணைந்து
மக்களின் நலனுக்காக
சேவைகளைஆற்றினாய்
எம்மனதில் உன்பேச்சை
விதையாக விதைத்தாய்
இப்போது உன் ஞாபகஅலைகள்
மரமாகவளர்கிறது.
உன் ஆத்மாசாந்திஅடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கிறேன்.

நன்றி,

**சின்னையா சுப்பையா,**
மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள் தரிசித்த அன்பு ஆளுமை!

**30.06.2016** அன்று காலமான மேனாள் கரைச்சிப் பிரதேசசபை சகஉறுப்பினர் வே. செல்லத்துரை அவர்களின் நினைவுகளை இங்கு மீட்டிப்பார்க்கிறேன். இராமநாதபுரம் வட்டக்கச்சியை வசிப்பிடமாககொண்டு இப்பிரதேசங்களை பிரதிநிதித் துவப்படுத்தி எமது சபையிலே ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறும் ஆச்சரியமான ஓர் மனிதரை இன்றுநாம் இழந்து தவிக்கிறோம்.

தமிழ்த் தேசிய அரசியலில் அவர் இணைந்து கொள்வதற்கு முன்பே அவரைத் தெரிந்திருந்தாலும் அதற்குப்பின் அவருடனான நெருக்கம் அதிகரித்தது. தமிழ் மக்களின் பிரச்சனையின் தீர்வுக்கு தமிழ்த்தேசிய அரசியலை அவர் முதன்மையாக நம்பியிருந்தார். மக்களின் விடிவுக்காய் அதனுடன் இணைந்து தளராது குரல் கொடுத்த ஓர் அற்புத மனிதராகவே எம் கண்களுக்குத் தெரிந்தது.

பக்கத்தில் இருந்துகுரல் கொடுத்த அற்புத மனிதரை இழந்திருந்தாலும் அவரின் இலட்சிய கனவும் அவர் தொடர்ந்த பணிகளும் எம் மனதிலே ஆழமாய் பதிந்துள்ளது. ஆவரின் பணிகளைத் நாம் தொடர்ந்தது முன்னெடுத்துச் செல்வதே அவரின் ஆத்மா சாந்திக்காக நாம் செய்யும் பிரார்த்தனையாகும்.

எனவே எம்மை விட்டுப்பிரிந்த அமரர். வே.செல்லத்துரை ஐயா அவர்களின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எனதுஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சி.தவபாலன்.**

மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,

கரைச்சிப் பிரதேச சபை

கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுதாரணம் எங்கள் செல்லத்துரை.

2011ம் ஆண்டுகரைச்சிப் பிரதேச சபை மக்கள் பிரதிநிதிகளை கொண்டு நிறுவப்பட்ட போது அதன் ஓர் உறுப்பினராக அவருடன் பழகி வந்தேன்.

சபை நடவடிக்கைகளின் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் மிகுந்த கரிசனையுடன் எந்த விதவிட்டுக்கொடுப்பிற்கும் இடமின்றி உறுதியுடன் கருத்துக்களை முன்வைப்பார்.

அனைவரிடத்திலும் அன்பாகப்பழகும் பண்பு கொண்ட இவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் கட்சி சார்ந்தும், பிரதேச சபை சார்ந்தும் செயற்பட்டவிதம் ஒரு சமூகச் செயற்பாட்டாளனின் அர்ப்பணிப்புடனான மக்கள் பணியை உறுதிசெய்தது. அது என்னுடான சமூகப் பணிக்கு ஓர் முன்னுதாரணமாக அமையும் என நம்புகின்றேன். ஆத்மாசாந்தி பெறவேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

நன்றி,

**தம்புபாலாபிசேக இராஜசிங்கசேதுபதி,**
மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய மனிதனின் நினைவுகள்!

காலஞ்சென்ற மேனாள் கரைச்சிப் பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் அமரர் வே.செல்லத்துரை அவர்களின் நினைவுகளைத் தாங்கி வெளிவரும் இம்மலரின் ஊடாக அவரின் நினைவுகளைத் திரும்பிப் பார்க்கிறேன்.

இராமநாதபுரம்,வட்டக்கச்சி,மாயவனூர் கிராமத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளைஅவர் சபையிலே எழுந்து நின்று நிதானமாக எடுத்துரைக்கும் சந்தர்ப்பங்கள் என் மனதிலே நிழலாடுகின்றன. அவரின் நிதானமும்,அனுபவமும், மூப்பும் அவரை ஓர் உயர்ந்த மனிதராக எம் மத்தியில் வலம் வர செய்தது.

தமிழ் மக்களின் நியாயமானஅரசியல் கோரிக்கைக்கு அவர் தனதுகுரலை ஓங்கி ஒலிக்கச் செய்தவர். அன்றாட அரசியல் பிரச்சனைக்காய் உடல் நிலைபார்க்காமல் வீதியில் இறங்கி ஜனநாயக வழியில் போராடிய செம்மலை நாம் இழந்திருக்கிறோம். அந்த இழப்பின் வலிதாங்க முடியாதவர்களாய்த் தவிக்கின்றோம்.

தமிழ்த் தேசிய அரசியலின் நண்பராய் எனக்கு அறிமுகமாகிய அவர் ஓர் இலட்சிய நோக்கோடு தனது வாழ்நாளை மக்களுக்காய் அர்ப்பணித்து எமக்கு முன்னுதாரணமாய் விளங்கியவர்.

அவர் எடுத்துக்கொண்ட அந்த இலட்சிய நோக்கை வெற்றி பெறச் செய்வது தான் நாம் அவருக்காய் செய்யும் பிரதியுபகாரமாய், அவர் வாழ்ந்த வாழ்வை அர்த்தப்படுத்துவதாய், அமையும் என்பதிலேநான் திடமான நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

எனவே அவரின் கொள்கையில் நடந்து அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார், உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப.குமாரசிங்கம்,**
மேனாள் பிரதேச சபை உறுப்பினர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாந்தர ஆளுமையின்

# வடிவமாக அமரர் செல்லத்துரை!

எம்மைவிட்டுப் பிரிந்து நீண்டதூரம் சென்று விட்ட எம் நெஞ்சங்களுடன் என்றும் இணைந்திருக்கும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அவர்கள் என்னுடன் கட்சி நடவடிக்கைகளோடு ஐந்து வருடங்களுக்கு மேலாக மிகவும் அர்பணிப்புடன் ஈடுபட்டு வந்ததையும் அவர் தனது தள்ளாடும் வயதிலும் தேசியத்திற்காகவும்,தமிழின விடிவுக்காகவும் துணிவோடு உழைத்ததையும் என்றும் மறக்க முடியாது.

அத்துடன் பிழை எங்கு நடந்தாலும் பிழையை யார் விட்டாலும் அதை உரத்துச்சொல்லாமலும் குணம் கொண்ட இவர் எமது இன விடுதலையோடு சேர்ந்து மக்களுடைய வாழ்தார அபிவிருத்தியையும் சமாந்தரமாக கொண்டுசெல்ல வேண்டும் என்ற ஆழமாக கருத்துக்களை கொண்டவராகவும், காணப்பட்டார். அத்துடன் இவர் மிகுந்த அன்புடன் அனைவருடனும் பழகும் மனப்பாங்கும் கொண்டவர். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றேன். அத்துடன் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சுப்பிரமணியம் சுரேன்,**
தலைவர்,
இளைஞர் அணி,
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு,
கிளிநொச்சிமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு திசை நோக்கிய விசையின் குறிப்பு!..

தமிழ்த் தேசிய பற்றாளர் அமரர். செல்லத்துரை அவர்களின் ஆத்மா சிவப்பேறு அடையப் பிரார்த்தித்தவனாக அவர் பற்றிய நினைவுகளைப் பதிவிடுகிறேன். அமரர். செல்லத்துரை அவர்கள் 2011ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது தான் என்னுடன் பெரிதும் அறிமுகமானவர்.

ஆனால் அதன் பின்னரான குறுகியதும் இருண்டதுமான காலப்பகுதியில் அரசியல் சமூகச் செயற்பாட்டுத் தளத்தில் அவர் வெளிப்படுத்திய முன்மாதிரிகள் மெச்சவும், பின்பற்றவும் தக்கவையாகும். நாங்கள் வரித்துக்கொண்டுள்ள தேசிய விடுதலைப்பயணத்தில் அவரது கால அர்ப்பணிப்பு வலுவானது. மகிந்த ராஜ பக்ச காலஅரசியல் சர்வாதிகாரங்களுக்கும், சண்டித்தனங்களுக்கும் எதிராகப் போராடிய பலவான். அவ்விருண்ட காலப்பகுதியில் இலட்சிய தாகம் தீர்ந்து போகாது விடுதலைப் பணியாற்றியவர். நிர்வாக ஆளுமையும் மக்களின் விருப்பு வெறுப்புக்களைப் பிரதி பலிக்கின்ற குரலும் நற்பண்புகளின் வெளிப்பாடும் நேர முகாமைத்துவ ஆளுமையும் இளைஞர்களுக்கு ஒத்திசைவான நட்பும் கட்சிக்கும் தலைமைக்கும் பணிவுடைய செயலுமாக வாழ்ந்து எமது இளைய அரசியலாளர்களுக்கும் இளந்தலை முறைக்கும் வழிகாட்டிய தமிழ்த்தேசியவாதி அமரர் வே.செல்லத்துரை அவர்களின் ஆத்மா அமைதி பெறுகின்ற வேளை அவர் ஆற்றிய பணிகள் நோக்கிய எங்களது பயணங்கள் பலம் பெறட்டும்.

நன்றி,

**அ.வேழமாலிகிதன்.**

கொள்கை பரப்புச் செயலாளர்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு,

கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சேவையூடாக தமிழ் மக்களிடம் தனியிடம் பிடித்தவர் செல்லத்துரை

**"நெருனல் உளன் ஒருவன்**

**இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு"** என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க மரணம் வெல்ல முடியாதென்பதை அறிந்தும் மனிதர்கள் மரணத்தை எண்ணிக் கலங்குகிறார்கள். இறந்து போனவர்களை சைவர்கள் சிவபதவி அடைந்தார் என்கிறார்கள். அந்தப்பதவி இந்தப்பதவி என்று அலைகின்ற மனிதன் கடைசியாக அடைகின்ற பதவியே சிவபதவி. உச்சமான பதவி அது. உன்னதமான பதவி. எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பதவி அது. சீக்கிரம் கிடைக்கவேண்டும் என்று பலரும் விரும்பாத பதவி அது. விரும்பினாலும் விரும்பா விட்டாலும் தப்பமுடியாத பதவி. தவிர்க்க முடியாதது. இவ்வகையில் கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினராகவும் இராமநாதபுரம் மாவடி அம்மன் கோவில் தலைவராகவும் செயற்பட்டு வந்த சமூகசேவையாளர் செல்லத்துரை அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறையருளை வேண்டுகின்றேன்.

செல்லையா புஸ்பராசா
மேனாள் கரைச்சிபிரதேச சபை உறுப்பினர்
தர்மபுரம்

## மக்களின் துன்பத்தில் பங்கொண்ட உன்னத மனிதன்

யுத்தத்துக்குப் பின்னாரான காலப்பகுதியில் கரைச்சிப் பிரதேச சபையை மீள் வளர்ச்சிக்கு கொண்டு வருவதற்கு பெரும் பங்காற்றியவர். இவருடைய சேவைகளும் இவருடைய பதிவுகளும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. ஈழமண்ணின் விடுதலைக்காக தன்மகனை விலையாக கொடுத்த வீரத்தந்தை. கரைச்சி மக்களின் மனங்களில் தனக்கென ஓர் இடத்தை அடையாளப் படுத்தியவர் . எங்கள் இனம் விடுதலையை வென்றடுக்க வேண்டும் என்னும் நோக்கத்தை இலட்சியமாக கொண்டு தன் இறுதி முச்சுவரை தமிழ் மக்களின் துன்பத்தில் இருந்து மீள பங்குகொண்ட ஒர் உன்னத மனிதன் . காலங்கள் மாறினாலும் ஈழத் தமிழர்கள் மனங்களில் நினைவிருக்கவேண்டிய முதுமை தந்தை செல்லத்துரை ஐயா. இவருடைய இழப்பு தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற ஒவ்வொரு தன்மானத் தமிழனுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

க. ஜெயக்குமார்
மத்திய குழு உறுப்பினர்
இலங்கைதமிழ் அரசுக் கட்சி
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபையின்
# பொதுமக்கள் சாசனம்

## ஆதனங்களின் பெயர்மாற்றம்

- சபையில் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- நில அளவைப் படத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சார்பில் விடயமுகாமை உதவியாளர் அறிக்கையிடுவதற்கு ஒரு நாள்
- வருமான மேற்பார்வையாளர் அறிக்கை வழங்குவதற்கு ஒரு நாள்.
- விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- விலை மதிப்பீட்டு திணைக்கள அறிக்கை கிடைக்கப்பெற்ற பின் பதிவேடுகளில் மாற்றம் செய்து மீள் மதிப்பீட்டினை விண்ணப்பத்தாரிக்கு அறிவிப்பதற்கு ஒரு வாரம்.
- பூர்த்தியாக்கப்படும் காலம் ஒரு மாதம்
- பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் - **ரூபா 57.50**
- பரிசீலனைக்கட்டணம் - **ரூபா 115**

**காணி சுவீகரிக்கப்படாமைக்குரிய சான்றிதழ்**
**வீதி எல்லைச் சான்றிதழ்,**
**காணி உரிமைச் சான்றிதழ் என்பன பெறுதல்**

- காணி உறுதி நில அளவை வரைபடத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சார்பில் விடய முகாமை உதவியாளர் அறிக்கையிடுவதற்கு இரண்டு நாட்கள்.
- விண்ணப்பம் தொடர்பில் தொழில்நுட்ப அலுவலர் அறிக்கைப் பெறுவதற்கு ஒரு வாரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழில்நுட்ப அலுவலர் அறிக்கையின் பெயரில் சான்றிதழ் வழங்குவதற்கு மூன்று நாட்கள்.
- சான்றிதழ் கட்டணம் - **ரூபா 250**

## கட்டட விண்ணப்ப அனுமதி

- உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பத்தை பெறல் வேண்டும்.
- எமது சபையில் பதிவு செய்யப்பட்ட பட வரைஞரால் அல்லது கட்டட கலைஞர் ஒருவரால் கட்டட வரைபடம் வரையப்படவேண்டும்.
- சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சார்பில் விடய முகாமை உதவியாளர் பரிசீலனைக்கு ஒரு நாள்.
- விண்ணப்பம் தொடர்பில் தொழில்நுட்ப அலுவலர் அறிக்கை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- வீதி தொடர்பாக R.D.A, R.D.D ஆகியவற்றின் சிபார்சினை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சினை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- U.D.A சிபார்சினை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- சிபார்சு கிடைத்தபின் அங்கீகாரம் வழங்குதல் ஒரு வாரம்
- கட்டட அனுமதி வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். தவறின் அதற்குரிய கட்டணம் செலுத்தி கால நீடிப்புக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
- கட்டட விண்ணப்ப படிவத்திற்கான கட்டணம் - **ரூபா 300**
- பரிசீலனைக் கட்டணம் U.D.A பரப்பிற்குள் உட்படும்

பிரதேசங்களுக்கு -**ரூபா 500** U.D.A பரப்பிற்குள் உட்படாத பிரதேசங்களுக்கு - **ரூபா 250** தளமேற்பரப்பிற்கு கட்டணம் 1000 சதுர அடிக்கு - **ரூபா 750**

- மேற்படும் ஒவ்வொரு சதுர அடிக்கும் - **ரூபா 0.5**
- காலநீடிப்பு பெறுவதற்கான கட்டணம் - **ரூபா 150**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைவு சான்றிதழ் வழங்குதல்**

- கட்டடம் பூர்த்தியானதும் சபைக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.
- கட்டடம் பூர்த்தியானதும் அமைவு சான்றிதழுக்கான விண்ணப்பம் சார்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- தொழில்நுட்ப அலுவலர் அறிக்கை பெறுவதற்கு இரண்டு வாரம்.
- சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பெயரில் அமைவுச் சான்றிதழ் வழங்குவதற்கு இரண்டு நாட்கள்
- அமைவுச்சான்றிதழ் கட்டணம் - **ரூபா 150**

**புதிய கட்டடத்திற்கான மீள் மதிப்பீட்டு அறிவித்தல்.**

- மீள் மதிப்பீட்டிற்கான விலை மதிப்பீட்டு திணைக்கள அறிக்கை பெறுவதற்கு மூன்று வாரம்
- விலை மதிப்பீட்டுத் திணைக்கள அறிக்கை கிடைக்கப்பெற்று பதிவேடுகளில் மாற்றம் செய்து மீள் மதிப்பீட்டினை அறிவிப்பதற்கு ஒரு வாரம் .
- மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பின் புதிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
- **பொது பயன்பாட்டு சேவைகள்**
- சபையால் வழங்கப்பட்ட கடைக்கு குத்தகை பத்திரம் புதுப்பித்தல் **1 மணித்தியாலயம்**

**கழிவகற்றல் சேவை**

அதிகளவான கழிவுகளை அகற்ற வேண்டியுள்ள தனியார் பொது அமைப்புக்கள் மூன்று நாட்கள் முன்னறிவித்தலில் இச்சேவையை பெற்றுக்கொள்ளலாம்.

இச் சேவைக்கு நியாயமான கட்டணம் அறவிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Bowser மூலம் தண்ணீர் வழங்குதல்

- பொது அமைப்புக்கள் ஆலயங்கள் போன்றவற்றின் மிக அவசியமான தேவையின் பொருட்டு Bowser மூலம் தண்ணீர் வழங்கல் சேவை.
- ஒருவார முன்னறிவித்தலில் இச்சேவையை பெற்றுக் கொள்ளலாம்.
- இச்சேவைக்கு நியாயமான கட்டணம் அறவிடப்படும்.

### வியாபார உரிமைப்பத்திரம் வழங்குதல்

- சாதாரண வியாபார ஸ்தாபனம்.
- உரிய கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தைப் பெறல் 30 நிமிடங்கள்.
- வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் அறிக்கையின் பெயரில் சான்றிதழ் வழங்குதல் இரண்டு நாட்கள்
- பணம் செலுத்தி உரிமம் பெறல் 3 மணித்தியாலயம்
- தங்களால் நடாத்தப்படும் வியாபாரத்திற்கேற்ப கட்டணம் அறவிடப்படும்.

### பேக்கரி, தேனீர்க்கடை, சாப்பாட்டுக்கடை, குளிர்பானக்கடை சலூன், அரைக்கும் ஆலைகள்

- உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பத்தைப் பெறல் 30 நிமிடங்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கையைப் பெறல் இரண்டு வாரங்கள்.
- வருமானப் பரிசோதகர் வருமான மேற்பார்வையாளர் அறிக்கைபெறுவதற்கு இரண்டு நாட்கள்.
- பணம் செலுத்தி உரிமம் பெறல் ஒரு நாள்.
- மேற்படி கடைகளில் உணவுப்பண்டங்கள் கையாள்பவர்களுக்கான தகைமைச் சான்றிதழ் வழங்குதல் ஒரு வாரம்.

### நூலக சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♣ நூலக அங்கத்தவர்களுக்கு உத்தரவாதம் வழங்குபவர்கள் எமது சபையின் எல்லைக்குட்பட்ட உப அலுவலகங்களில் தமது பெயரில் சோலைவரி செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.
- ♣ எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்டவர்களுக்கு ரூபா 100 உம் ஏனையவர்களுக்கு ரூபா 500 உம் நூலக அங்கத்துவ வைப்புப் பணமாக செலுத்தப்பட வேண்டும் - **10 நிமிடம்.**
- ♣ அங்கத்தவர் விண்ணப்ப அங்கீகாரம் - **30 நிமிடங்கள்.**

**சுற்றாடல் உரிமம் வழங்குதல்**

- ♣ உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பத்தைப் பெறல் வேண்டும் **30 நிமிடங்கள்.**
- ♣ பரிசீலனைக் குழுவின் அறிக்கையினைப் பெறுவதற்கு இரண்டு வாரம்.
- ♣ ஒரு மாதத்திற்கு பின் மீள் பரிசீலனை அறிக்கையை பெறுவதற்கு ஒரு வாரம் .
- ♣ சுற்றாடல் பாதுகாப்பு உரிம விண்ணப்பம் ஒரு வாரம்

உரிமம் வழங்கல்

- ♣ சபை பரிசீலனைக் குழுவின் அறிக்கை பெறுவதற்கு இரண்டு வாரங்கள்
- ♣ சூழல் பாதுகாப்பு உரிமம் - **ரூபா 400**

**ஏனைய சேவை**

- மிருக, சைக்கிள் உரிமம் வழங்கல் - **10 நிமிடம்**
- வளர்ப்பு நாய்களுக்கு தகடு வழங்கல் - **10 நிமிடம்**
- துவிச்சக்கர வண்டி உரிமக் கட்டணம் - **ரூபா 20**
- வளர்ப்பு நாய்களுக்கு உரிமக் கட்டணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டம்

பாராளுமன்ற உறுப்பினர்கள் – யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

1. கௌரவ. மாவை. சோமசுந்தரம் சேனாதிராசா – பாராளுமன்ற உறுப்பினர்.

   இல.30,மாட்டின் றோட்,யாழ்ப்பாணம்.

   மாவிட்டபுரம்,தெல்லிப்பளை.

   0212221877 - 0212227559 – 0777714933

2. கௌரவ. சிவஞானம் சிறீதரன் – பாராளுமன்ற உறுப்பினர்.

   No: 882, ஆறுமுகம் வீதி,வட்டக்கச்சி.

   0212280024- 0776913244 -0212280024

3. கௌரவ. ஈஸ்வரபாதம் சரவணபவன் – பாராளுமன்ற உறுப்பினர்.

   No:361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

   0212219616 - 0714115002 - 0212219616

4. கௌரவ. ஏபிரகாம் சுமந்திரன் – பாராளுமன்ற உறுப்பினர்.

   No: 3/1,தயாறோட்,கொழும்பு– 06

   0777314628- 0112503107

5. கௌரவ. தர்மலிங்கம் சித்தார்த்தன் – பாராளுமன்ற உறுப்பினர்.

   கந்தரோடை,சுன்னாகம்,யாழ்ப்பாணம்.

   0777952707



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண சபை அமைச்சர்கள்

1. கௌரவ. நீதியரசர். C.V.விக்கினேஸ்வரன். – முதலமைச்சர் ,வடக்குமாகாணம்.

No:26,சோமசுந்தரம் அவனியூ,சுண்டிக்குளி,யாழ்ப்பாணம்.

0213202465 - 0212217227

2. கௌரவ. தம்பிராசா குருகுலராசா –

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.

No: 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

0212054094 - 0212054093

3. கௌரவ. பொ.ஐங்கரநேசன். –

கால்நடை, விவசாய, அபிவிருத்திமற்றும் நீர்ப்பாசன அமைச்சர், வடக்குமாகாணம்.

No: 295, கண்டிவீதி,அரியாலை,யாழ்ப்பாணம்.

0212211266 - 0212211267

4. கௌரவ. வைத்தியகலாநிதி சத்தியலிங்கம்.–

சுகாதார அமைச்சர்,வடக்கு மாகாணம்.

02 வதுமாடி, ஆரோக்கியபுரம், பன்னாலை, யாழ்ப்பாணம்.

0212217403 - 0212217402 -0773503394

5. கௌரவ. T. டெனீஸ்வரன் –

மீன்பிடி,போக்குவரத்துஅமைச்சர் – வடக்குமாகாணம்.

No:655, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.

0212217301 - 0212217301- 0772083020

### மாகாண சபை உறுப்பினர்கள் - கிளிநொச்சி

1. கௌரவ. ப. அரியரத்தினம் – மாகாணசபை உறுப்பினர் – வடக்குமாகாணம். பெரியபளை,பளை.

077 5462 205- 021 2250 044

௨. கௌரவ. சு.பசுபதிப்பிள்ளை – மாகாணசபைஉறுப்பினர் – வடக்குமாகாணம்.

No: 870, திருநகர் வடக்கு,கிளிநொச்சி.

0778905499 - 0247200264



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி.

0212283945-0212283966

திரு. சுந்தரம் அருமைநாயகம் – மாவட்டச் செயலாளர்,மாவட்டச்செயலகம்.

0775522060

அலுவலகம்.

0212283965 -02122839660212283964

திரு. எஸ்.சத்தியசீலன் – மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச்செயலகம்.

0779235888 -0212285456

திரு. எஸ்.மோகனபவன் – திட்டமிடல் பணிப்பாளர்,மாவட்டச்செயலகம்.

0773024349 -0212285760

திரு. எம். மோகனதாஸ் – விளையாட்டு உத்தியோகத்தர் – மாவட்டச் செயலகம்.

077 6145 246

திரு. எம். அருள்சந்திரன்– கலாச்சார உத்தியோகத்தர் – மாவட்டச்செயலகம்.

0777743240

திரு. எம். அருள்சந்திரன் – கலாச்சார உத்தியோகத்தர் – மாவட்டச்செயலகம்.

சமுர்த்தித் திணைக்களம் – மாவட்டச் செயலகம்.கிளிநொச்சி.

0212283843- 0212283842

சமுர்த்தித் திட்டப்பணிப்பாளர் – மாவட்டச்செயலகம்.

0771020542 - 0212283842

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.

0212285330 - 0212285330

பெண்கள் மற்றும் சிறுவர்கள் பகுதி – மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.

திரு. ஆர்.செந்தூரன் – சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

0776108428 - 0213201414



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. எஸ்.சகிலா – பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

0775547902

திருமதி. எஸ். ஜெனிதா – சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

0773054582.

திரு. ரி. சர்வேஸ்வரன் – குழந்தைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

077 1000 770.

**உளவியல் பகுதி - மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.**

திரு. எஸ். துஸ்யந்தன் – ஆலோசனையாளர் – மாவட்டச் செயலகம்,கிளிநொச்சி.

0779103322.

தேர்தல்கள் திணைக்களம் - மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.

0212285664 -0212285664

திரு.அமல்ராஜ்.உதவித்தேர்தல்கள்ஆணையாளர் கிளிநொச்சி.

0778379686

வாகனப்போக்குவரத்துத் திணைக்களம் - மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.

திரு யு.டி.ஏ. ஆர்.தசநாயக. பரிசோதகர். வாகனப்போக்கு வரத்துத் திணைக்களம் - மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.

0772285678 - 0212283847

திருமதி. எஸ்.சுனேத்திரா மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். மாவட்டச் செயலகம். கிளிநொச்சி.

07776084794 - 0212285069

தேசிய சமூக நலத்துறை நீர்விநியோகத் திணைக்களம் - மாவட்டச்செயலகம். கிளிநொச்சி.

திரு. எஸ்.விஜிதன் மாவட்டஅலுவலர் - மாவட்டச்செயலகம் கிளிநொச்சி.
0778060311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசசெயலகம் - கரைச்சி.
0212285739 - 0212285633
திரு. ஜி. நாகேஸ்வரன் - பிரதேச செயலாளர் - பிரதேசசெயலகம் - கரைச்சி.
0777077358 - 0212283874

**பிரதேச செயலகம் - கண்டாவளை.**
0212060300 - 0212060304
திரு. ரி. முகுந்தன் - பிரதேச செயலாளர் - பிரதேசசெயலகம் - கண்டாவளை.
0774939454 -0212060301

**பிரதேச செயலகம் - பூநகரி**
திரு. எஸ்.சி. கிருஸ்னேந்திரன் - பிரதேச செயலாளர் - பிரதேசசெயலகம் - பூ நகரி
0779844875 - 0212060801 0212060803

**பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி.**
021 2050 042 - 021 2050 041
திருமதி. பி. ஜெயராணி- பிரதேச செயலாளர் - பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி.
0777730280- 0212050061

**கரைச்சிப் பிரதேச சபை**
செயலாளர் கரைச்சிப்பிரதேச சபை திரு.க.கம்சநாதன்
021 228 5761 - 070 291 9200 - 077 364 8193

**காவல் பணிமனை - கிளிநொச்சி**
021 228 5467

**நோயாளர் விரைவு காவு சேவை**
021 222 4444
021 222 5555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்கான பயணத்தில்...









தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு

இலங்கை தமிழ் அரசு கட்சி

"அறிவகம்"

கிளிநொச்சி

தொலைபேசி இலக்கம்:0212280024

arivakam.media.centre@gmail.com

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org